# NGM COLLEGE

(AUTONOMOUS)

Re-Accredited with 'A' Grade by NAAC

An ISO 9001 : 2015 Certiied Institution

POLLACHI - 642 001

# மனையியல் மகத்துவம்

(சான்றிதழ் பாடத்திட்டம்)

(Certificate Course)



## குடும்பப் பண்பாடும் பாரம்பரியமும்

இரண்டாம் தாள்

*Empower the Youth to Enrich the Nation*

# மனையியல் மகத்துவம்

## சான்றிதழ் பாடத்திட்டம்

## (Certificate Course)

முனைவர் க. தனலட்சுமி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி.

## குடும்ப பண்பாடும் பாரம்பரியமும்

## இரண்டாம் தாள்

பதிப்பு

**என்.ஜி.எம்.கல்லூரி**

**பொள்ளாச்சி**

பாட நூல் : மனையியல் மகத்துவம்
பதிப்பு : முதற்பதிப்பு - 2018
வெளியீடு : என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

## ஆலோசனைக் குழு

**டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்**
தலைவர், என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

**முனைவர் வாசுகி ராஜா**
புலமுதன்மையர், மனையியல் கல்வித் துறைகள்
அவினாசிலிங்கம் உயர்நிலைக் கல்வி கோவை.

**முனைவர் மணிமொழி**
இணைப் பேராசிரியர்,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம் -
நிகர்நிலைப்பல்கலைக்கழகம், கோவை.

**முனைவர் அ.லோகநாயகி**
உதவிப் பேராசிரியர், அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம், கோவை.

**திருமதி சுமதி முத்துசாமி**
ஆசிரியர் மற்றும் தலைவர், கிராமப்புற தத்தெடுப்புத் திட்டம்
அறிவுத் திருக்கோவில், பொள்ளாச்சி.

## நூல் ஆக்கக் குழு

**தலைவர்**

முனைவர் பொ.மா.பழனிசாமி, முதல்வர்

**தொகுப்பாசிரியர்**

முனைவர் ப. பிருந்தா, தலைவர் வணிகவியல்துறை

**துணை தொகுப்பாசிரியர்கள்**

பேராசிரியர் என்.இராதா, தலைவர் ஆங்கிலத்துறை (சுயநிதி)
முனைவர் ஜி.அகிலாண்டேஸ்வரி, தலைவர் வணிக நிதியியல்துறை (சுயநிதி)
முனைவர் எம்.வி.சத்தியபாமா, தலைவர் மின்னணு வணிகவியல் துறை (சுயநிதி)
முனைவர் க.தனலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பேராசிரியர் எஸ்.ஜெயலட்சுமி, தலைவர் மனிதவள மாண்புத்துறை (சுயநிதி)
முனைவர் ஆ.மகாலட்சுமி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
முனைவர் ப.வடிவேல், இணைப்பேராசிரியர் (ப.நி), தமிழ்த்துறை

---

அச்சிட்டோர் : ருக்மணி ஆப்செட் பிரஸ், சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை - 6
போன் : 0422-2672789, 2672435. ஈமெயில் : office.rukmaniop@gmail.

# பொருளடக்கம்


அணிந்துரை

வாழ்த்துரை

ஆசிரியருரை

நோக்கங்கள்

பாடத்திட்டம்

1. சகிப்புத்தன்மையே வெற்றிக்கு வழி — 1
முனைவர் ப.பிருந்தா

2. சகிப்புத்தன்மைக்குச் சான்றுகள் — 8
முனைவர் எம்.வி.சத்தியபாமா

3. அனுசரணையும் அரவணைப்பும் — 16
முனைவர் ஆ. லோகமாதேவி

4. அனுசரணையின் பயன்கள் — 22
முனைவர் க.அகிலாண்டேஸ்வரி

5. பொறுமை பெண்ணின் பெருமை — 27
பேராசிரியர் பி.நாகராஜன்

6. பொறுத்தார் பூமி ஆள்வார் — 32
பேராசிரியர் பி.நாகராஜன்

7. குடும்ப கௌரவம் — 37
பேராசிரியர் நா.ராதா

8. பெண்கள் கௌரவத்தின் நாற்றங்கால்கள் — 44
முனைவர் எஸ். மாரியம்மாள்

9. மறப்போம் மன்னிப்போம் — 47
முனைவர் ப.வடிவேல்

10. மறப்பதும் மன்னிப்பதும் மங்கையரின் மாண்பு — 51
முனைவர் ப.வடிவேல்

மாதிரி வினாத்தாள்

# பகுதி - IV குடும்ப கௌரவம்

## 4.1 நல்ல குடும்பம் நமது இலட்சியம்

நா.ராதா
தலைவர், இணைப் பேராசிரியர்,
ஆங்கில மொழியியல் துறை, என்.ஜி.எம்.கல்லூரி.

### 1. கௌரவமான குடும்பப் பாரம்பரியம்

பண்டைக் காலத்திலிருந்து இந்திய சமூகத்தில் குடும்பம் என்பது, கலாச்சாரத் தொகுப்பின் அடையாளமாக உள்ளது. இந்திய கலாச்சாரத்தில் முக்கிய அம்சமாக இருந்த, கூட்டுக்குடும்ப முறை, நகர்ப்புற மற்றும் மேற்கத்திய கலாச்சாரத்தால் பாதிக்கப்பட்டது. நகர்ப்புறங்களில், கணவன் - மனைவி அவர்களது குழந்தைகள் மட்டுமே வசிக்கும் "நியூக்ளியர்" குடும்பங்கள் உருவானதால், கூட்டுக்குடும்ப முறையில் இருந்த சமூக, பொருளாதார பாதுகாப்பு குறைந்தது. இன்றைய வாழ்க்கை முறையானது. கூட்டுக்குடும்ப முறையின் கலாச்சார மதிப்புகள், பாரம்பரியம் மற்றும் பழக்க வழக்கங்களை பாதுகாப்பதில், கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எனவே மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருக்கும் கூட்டுக்குடும்ப கலாச்சாரத்தின் உட்பொதிவாக இருக்கும் குடும்ப கௌரவத்தையும், அதன் தோற்றப் பின்புலங்களையும் மீண்டும் நினைவூட்டிக் கொள்வதாக இப்பகுதி அமைகின்றது.

குடும்பம் என்னும் சொல் கூடல் என்னும் பொருள் கொண்ட குல் என்னும் தமிழ் வேர்ச்சொல்லின் அடியாகப் பிறந்தது. குல், குள், குழு என மாற்றம் பெறும். குழு என்பது கூட்டம் என்ற பொருள் தருவது. குழு, குழும்பு, குடும்பு, குடும்பம் என்றவாறு குடும்பம் என்னும் சொல் பெறப்படுகிறது. இது பெற்றோரும், பிள்ளைகளும் சேர்ந்த கூட்டம் என்ற பொருள்தருகிறது. மனித சமுதாயத்தின் அடிப்படை அலகு குடும்பம் ஆகும். குடும்ப அமைப்பு ஒழுங்கான முறையில் அமைந்தால் அது நல்ல குடும்பம் எனப்படும்.

குடும்பம் என்ற அமைப்பின் நோக்கம் நிகழ்கால நிம்மதி, எதிர்காலப் பாதுகாப்பு ஏற்பாடு வசதியோடு எதிர்காலத் தலைமுறைக்கான அன்பு, அரவணைப்பு உத்தரவாதம் ஆகிய அனைத்துமே நல்ல குடும்பத்தில் கிடைக்கச் செய்வதேயாகும். தனிமனித ஒழுக்கம், சமூகஅமைப்பு, பொறுப்புள்ள வாழ்க்கை இவற்றில் நம்பிக்கையுடையவர்கள் குடும்பம் என்ற அமைப்பைப் பாதுகாக்கவே விரும்புகிறார்கள். சிலைக்கு வலிக்குமோ என்று சிற்பி வருந்தினால் சிற்பம் பிறக்காது. வலி சிலைக்கு மட்டுமின்றி செதுக்குகிற உளிக்கும் தான் என்று சிற்பத்திடம் சொல்லிவிட்டு சிற்பி தொடர்ந்து செதுக்க வேண்டும். அதைப் போல,

குடும்பத்திலும் கணவன், மனைவி உறவில் சண்டை வந்தால் அந்த வலி குடும்பத்திற்குத் தான் என்று நினைத்து குடும்பத்தில் சண்டையை விடுத்து வாழ்வில் சுகம் காண விழைய வேண்டும். இதில் அமைந்துள்ளது குடும்ப கௌரவம்.

## 2. பாரம்பரியத்தைக் காக்கும் வழிமுறைகள்

இந்தியாவில் பிறக்கும் குழந்தை பல்லாயிரம் ஆண்டுகளின் பண்பாட்டுப் பாரம்பரியப் பின்னணியில் பிறந்து வளர்கின்றது. இந்தியா பல மொழிகள் பேசும் வேறுபட்ட பல கலாச்சாரங்களைக் கொண்ட பல இனமக்கள் வாழும் நாடு ஆகும். பல்வேறு கலைகள், இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றில் சிறப்புப் பெற்ற கலைவாணர்கள், இசைஞானிகள், கவிஞர்கள், இலக்கியவாதிகள் போன்றோர் பலர் வாழ்ந்த பூமியாகும்.

தத்துவ ஞானிகள், முனிவர்கள், மாமன்னர்கள், போர் வீரர்கள், தியாகச் செம்மல்கள், சமூகச் சீர்திருத்தவாதிகள், தூயதுறவிகள் ஆகியோர் வாழ்ந்த சமுதாய மரபுகளைப் பின்பற்றி இங்கு பிறந்து வாழும் குழந்தைகள் வளர்கின்றனர். பாரம்பரியங்கள் யாவும் குழந்தைக்குச் சமுதாயத்தில் தகுதி நிலையை ஏற்படுத்தித் தருகின்றன. இப்பண்பாட்டுப் பாரம்பரியம், அக்குழந்தை தானடைந்த கற்றல் அடைவுகளினால் தன்னம்பிக்கையைப் பெற்று எதிர்காலத்தில் தான் அடையவேண்டிய இலக்கினையும் நிர்ணயம் செய்து தருவனவாக அமைகின்றன. பண்பாடு என்பது இயற்கையின் மீதும், தன் மீதும் மனிதன் கொண்டிருக்கும் கட்டுப்பாடு. மனிதனுடைய இயற்கை உந்து உணர்வுகளான பசி, சேர்ந்து வாழ்தல், பாதுகாப்பு உணர்வு போன்றவைகள் உலகம் முழுவதும் ஒன்றாக இருப்பினும் அவைகள் வெளிப்படும் முறை வேறுபட்டுக் காணப்படுகின்றன. பொருள்சார் பண்பாட்டுக் கூறுகள் பற்பல மாற்றங்களைக் கொண்டு மாறிவரினும் உள்ம்சார் பண்பாடு அடியோடு மாறாமல் உயர்வு, சிறப்பு, நன்மை, அறம் போன்ற உட்கூறுகளைச் சிறிதும் பின்வாங்காமல் பின்பற்றி போற்றியே வருகின்றமை கண்கூடு.

## பண்பாட்டின் தன்மைகள்

ஜார்ஜ் பீட்டர் முர்டாக் பண்பாட்டின் தன்மைகளைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

1. மனிதன் பண்பாட்டுடன் பிறப்பதில்லை. சூழலோடு வாழ அவனைப் பொருத்திக் கொள்ள உதவும் ஒரு கற்றல் முறையே பண்பாடு.

2. பண்பாடு முன்னோர்களின் சில கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. முன்னோர்களிடமிருந்து அவற்றைப் பெற்று அதன் வழி மனிதன் வாழ வகை செய்கின்றது.

3. சூழ்நிலையிலுள்ள நல்ல கருத்துக்களை ஏற்றுக் கொள்ளப் பண்பாடு முயல்கின்றது. பல்வேறுபட்ட பண்பாடுகள் சமூகத்தில் இடைவினை புரிகின்றன. அவற்றில் நல்ல கருத்துக்களை சமூகம் ஏற்றுக் கொண்டு முழுமையான ஒன்றிணைந்த ஒரு பண்பாடாக உருப்பெறுகின்றது.

4. மனிதர்கள் தங்களுடைய எண்ணங்கள், நடத்தைகள் மற்றும் செயல்களைத் தொடர்ந்து தெளிவுபடுத்தவும், மெருகேற்றவும் செய்கிறார்கள். இதற்குப் பண்பாடு உதவுகின்றது.

5. பண்பாடு மனிதனின் புதிய தேடல்களுக்கும், புதிய தேவைகளுக்கும் அவன் இறக்கும் வரை உதவுகின்றது.

6. மனிதன் ஒரு சமூக விலங்கு. அவன் சூழ்நிலையின் கைதி. ஆயினும் நல்நெறிகளின் சிற்பியாகவும், பண்பாட்டின் காவலனாகவும் திகழ்கிறான். பண்பாடு, மனிதன் சமூகத்தில் வாழ அரண் செய்து உதவுகின்றது. பண்பாடு மனிதனை மனிதனாக உயர்த்துகின்றது.

இவ்வாறு பண்பாட்டை பற்றி எடுத்து உரைப்பதன் மூலம் பாரம்பரியம் என்பது என்ன! அதை எப்படிப் பாதுகாப்பது என்று புரியவைக்க முடியும்.

## 3. கல்வியின் மூலம் கௌரவத்தைக் காத்தல்

கல்வி என்பது தெரியாததைத் தெரியச் செய்வதன்று. ஒழுக்கத்தை ஒழுகச் செய்வதும் இன்பம் அளிப்பதுமாகும். ரஸ்கின் பாண்ட் சமூகத்தில் ஓர் ஆற்றல்மிக்க உறுப்பினராக விளங்க வேண்டுமானால் சமூக மதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கை, விருப்பங்கள், பழக்கவழக்கங்கள், பண்பாடு போன்றவற்றை விதைக்க வேண்டும். அதாவது மனிதன் ஒரு கவிஞனாகவோ, தத்துவமேதையாகவோ, ஒரு நல்ல ஆசியராகவோ, ஒரு திறமை வாய்ந்த மனிதனாகவோ வளரக் கல்வி மிகவும் அவசியம். எனவே ஒரு சிறந்த சூழ்நிலையை உருவாக்க உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக சிந்தனை ஆகிய சிந்தனைகள் வளரக் கல்வி அவசியம். ஒரு தனி மனிதனின் திறமைகள் அவன் தன்னுடைய சமுதாயத்தில் பண்பாட்டுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு உலகில் பங்களிப்பைச் செய்யக் கல்வி துணைபுரியும். கல்வியாலும், நமக்கு அதன் மூலம் கிடைக்கும் பதவியாலும் கௌரவம் அடையலாம். இன்றைய காலகட்டத்தில் தெளிவான திருத்தமான ஆரோக்கியமான சிந்தனைகளையே இவ்வுலகம் வரவேற்கின்றது. இத்தகைய மதிப்பு மிக்க சவால்களை புத்தி சாதுரியத்துடன் எதிர்கொள்ளக் கூடிய வகையில் மக்கள் ஒவ்வொருவரும் இருத்தல் வேண்டும். மேலும் ஒரு தனிமனிதனது முன்னேற்றத்திற்கு அறிவே பிரதானம் ஆகும். இதன் மூலம் தெரியவருவதாவது சமூகத்தில் மேன்மையான எண்ணம், கீர்த்தியான செயல், புகழுடைய தொலைநோக்கு என்பவற்றிற்கு வளர்ச்சியடைந்த அறிவு படைத்த மக்கள் தேவை. சமூக வளர்ச்சிக்கு அடிப்படையான வளம் அருளோ, பொருளோ அல்ல அறிவே ஆகும். எனவே மக்கள் வையத்தில் சிறந்து விளங்க அறிவே பிரதானம். கற்றலே கௌரவம் ஆகும்.

## 4. பேச்சில் கௌரவம் காத்தல்

இந்தத் தலைப்பிற்குச் சிறந்த வழிகாட்டி ஆத்திசூடியே ஆகும்.

சிறிய சிறிய தொடர்களால் சீரிய பண்புகளைக் கற்றுக்கொடுத்த, ஔவையார் நமக்களித்த அழியாச் சொத்து ஆத்திசூடி. அவரைப் பின்பற்றி பாரதி, பாரதிதாசன்

முதற்கொண்டு பல அறிஞர்கள் ஆத்திச்சூடியை இயற்றியுள்ளனர். பேசும் பேச்சில் கௌரவம் கடைப்பிடித்தலை ஔவையின் ஆத்திச்சூடி படம் பிடித்துக் கூறிச் செல்கின்றது.

### ஆறுவது சினம்

கோபம் கொள்ளக் கூடாது. கோபம் குறைந்த பிறகு ஆற அமர எடுக்கும் முடிவே சரியாக இருக்கும். எனவே கோபத்தைக் குறைத்துக் கொள்வது சாலச் சிறந்தது. கோபம் கொள்ளாமல் இருப்பது அதைவிட சிறப்பாக இருக்கும்.

### உடையது விளம்பேல்

உன்னிடம் இருக்கும் நன்மை தீமைகளை பிறரிடம் கூறாதே. நல்ல குணங்களைப் பற்றி கூறி பெருமை கொள்ளவும் கூடாது. கெட்ட குணங்களைப் பற்றிக் கூறி நம்மை சிறுமைப்படுத்திக் கொள்ளவும் கூடாது.

### ஔவியம் பேசேல்

மற்றவர்களைப் பற்றிப் பேசும் போது பொறாமையோடு பேசக் கூடாது. அவ்வாறு பேசுவதால் நம்மை அறியாமலே அவர்களை நமது எதிரியாக உருவாக்கி விடுகிறோம். எனவே அடுத்தவர்களைப் பற்றிப் பேசும் போது பொறாமையை தவிர்த்து பெருமையோடு பேசுவது நன்றாக இருக்கும்.

### கண்டு ஒன்று சொல்லேல்

நம் கண்களால் பார்த்ததைத் தவிர வேறு எதையும் சொல்லக் கூடாது. நாம் ஏதாவது சொல்ல நினைத்தாலும் அதை மிகைப்படுத்தாமல் சொல்ல வேண்டும்.

### ஞயம்பட உரை

ஒரு செய்தியை, அது நல்ல செய்தியோ, கெட்ட செய்தியோ, அதிர்ச்சியான செய்தியோ, துக்கமான செய்தியோ, அதை மற்றவர்களிடம் கூறும் போது மிகவும் கனிவான முறையில் கூறினால் நன்றாக இருக்கும்.

### வஞ்சகம் பேசேல்

எண்ணம் போல் வாழ்வு என்பார்கள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவது. மனதில் வஞ்சம் வைத்துப் பேசுவது, இவையெல்லாம் மற்றவர்களிடம் நம்மைப் பற்றிய தவறான எண்ணங்களைத்தான்உருவாக்கும். ஆகவே மற்றவர்களை உயர்த்தியோ, தாழ்த்தியோ பேசாமல் இயல்பாகப் பேசுவது நலம்.

### அழகு அலாதன செயல்

பிறர் இகழ்ந்து பேசக்கூடிய செயலையும், நாம் செய்யாமல் இருப்பதும் நலம்.

### கடிவது மற

கடுமையான சொற்களைப் பயன்படுத்திப் பேசக் கூடாது. கடுமையான பேச்சு ஒரு நண்பனையே பகைவனாக்கிவிடும். ஆகவே எப்பொழுதும் கடுமையான சொற்களை தவிர்த்து இனிமையாகப் பேச, பழகிக் கொள்ள வேண்டும்.

**சித்திரம் பேசேல்**

பொய்யை உண்மை போல பேசக் கூடாது. ஒரு பொய்யை திரும்பத் திரும்பப் பேசினால் அது உண்மையாகி விடும் என்பார்கள். அதன் விளைவு, நாம் கெட்டவர்களாவதுடன் அடுத்தவர் மனதைப் புண்படுத்தி வாழ்வைக் கெடுத்துவிடும்.

**சுளிக்கச் சொல்லேல்**

மற்றவர் முகம் கோணும்படியான சொற்களைப் பேசக்கூடாது. காதால் கேட்பதற்கே கூசும்படியான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும்.

**சொல்சோர்வுபடேல்**

யாருடன் பேசினாலும் நம் பேச்சு இறுக்கமாகவோ அல்லது மனம் தளர்ந்த சோர்வான பேச்சாகவோ இருக்கக் கூடாது. சுறுசுறுப்பான தன்னம்பிக்கையான பேச்சு நம் வாழ்வில் உயர்வைக் கொடுக்கும்.

**பிழைபடச் சொல்லேல்**

தவறான கருத்துக்களைத் தரும் பேச்சைப் பேச வேண்டாம். எதையும் நேரிடையாக பேச பழக்கிக் கொள்ள வேண்டும்.

**மிகைபடச் சொல்லேல்**

எதையும் அதிகப்படுத்திப் பேசக் கூடாது. ஒன்றைப் பத்தாக்குவது கூடாது.

**வல்லமை பேசேல்**

உன்னிடம் உள்ள திறமையைப் பற்றி நீயே புகழ்ந்து பேசக் கூடாது. அவ்வாறு தற்பெருமை பேசினால் மற்றவர்கள் நம்மை மதிக்கக்கூட மாட்டார்கள்.

**வாது முற்கூறேல்**

வலியப் போய் யாருடனும் விவாதம் செய்யக் கூடாது. வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டாம்.

**வெட்டெனப் பேசேல்**

வெட்டு ஒன்று. துண்டு இரண்டு என்கிற மாதிரி பேசக்கூடாது. "வார்த்தையைக் கொட்டாதே! அள்ள முடியாது" என்பார்கள். ஆகவே பேச்சில் கடுஞ்சொற்களைத் தவிர்ப்பது நல்லது.

**ஓரம் சொல்லேல்**

எதையும் யாருக்காகவும் ஒருதலைப் பட்சமாகக் கூறக் கூடாது. அவ்வாறு கூறுவது நீதி தவறுவதாகும். நீதி தவறிய பாண்டிய மன்னனால் மதுரையே எரிந்தது. இவ்வாறு ஆத்திச்சூடியில் ஔவையார் கூறியுள்ளதைப் பின்பற்றி வாழ்க்கையில் பேசப்பழகினால் எவ்வுரையாடலும் கௌரவமாக அமையும்.

### 5. உடையில் கௌரவம் காத்தல்

உடை அணிதல் மனிதருக்கே உரிய தனிச்சிறப்பு. உலகில் வாழும் ஏறத்தாழ எல்லா மனித சமுதாயங்களுமே உடைகளை உடுத்துகின்றனர் என்பதுடன்,இன்று மனிதரின் மிகவும் அடிப்படையான மூன்று தேவைகளுள் உடையும் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது. ஏனைய இரண்டும் உணவு உறையுள் என்பன. உடை அணியும் வழக்கம் எப்போது தோன்றியது என்பதை அறிந்து கொள்வது கடினமானது. உடை பல வகையான சமூக பண்பாட்டுச் செயற்பாடுகளையும் கொண்டுள்ளது. தனிமனித வேறுபாடுகள், தொழில் அடிப்படையிலான வேறுபாடுகள், பால் அடிப்படையிலான வேறுபாடுகள், சமூகத் தகுதி, அதிகார நிலை என்பவற்றைப் பொறுத்து வெவ்வேறு வகையான உடைகள் அணியப்படுகின்றன. சமுதாயங்களில் உடை தொடர்பான நெறிமுறைகள் அடக்கம், வெட்கம், சமயம், பால், சமூகத்தகுதி போன்ற அம்சங்கள் குறித்த அலங்கார அணியாகவும், தனிப்பட்ட ரசனைகளுக்காகவும் உடைகளை அணிகின்றனர். இவையும் உடைகள் அணிவதன் முக்கிய நோக்கங்களுள் அடங்குகின்றன.

உடைகள் இரண்டு தளங்களில் அர்த்தம் கொள்கின்றன. தேவை, வசதி சார்ந்த ஒரு தளம். அடையாளம் சார்ந்த ஒரு தளம். இவ்விரண்டுமே நாம் வாழும் சூழலுடன் சம்பந்தப்பட்டவையே ஒழிய நிரந்தரமானவை அல்ல. இன்றைய தேவைக்காகவும், வசதிக்காகவும் நாம் நம் உடைகளைத் தேர்வு செய்வதே இயல்பானது. இன்று வேட்டி மிக வசதிக் குறைவான உடை என்பதே எண்ணம். ஆகவே இன்று கால்சட்டையும், மேல்சட்டையும்தான் அணிகிறார்கள். மேற்கத்திய உடைகள் ஜீன்ஸ், டீஷர்ட் மற்றும் சல்வார், குர்தா, சுடிதார் இன்றைய வாழ்க்கை முறையில் பிரிக்க முடியாத ஒன்றாகிவிட்டது. மாறாக இந்திய கலாச்சாரத்தின் அடையாளமும், பாரம்பரிய உடையுமான ஒன்பது கஜ புடவை கிராமப்புறங்களில் உள்ள பெண்மணிகளுக்கு மட்டுமே என்றாகிவிட்டது.

இன்னொரு பக்கம் உடை என்பது அடையாளம். நம் சமூகம் நாம் புழங்கும் தொழிற்சூழல் ஆகியவை சார்ந்த உடைகளை நாம் அணிகிறோம். அந்தந்தத் தளத்திற்கான ஏதோ ஒருவகையில் எல்லா அடையாளங்களையும் உடைகள் கொண்டிருக்கின்றன. நிறுவனங்களும் உடைவிதிகளைக் கொண்டிருக்கின்றன. அலுவலகத்தில் வேலைபார்க்கும் நாட்களில் சட்டை பாண்ட் அணிந்து பெல்ட் கட்டி ஓர் அரசு ஊழியனுக்கான உடையில் இருக்கிறோம். அது வசதியை மட்டும் சார்ந்தல்ல, நம்மைச் சந்திக்கவரும் பொதுமக்கள் நம்மைப் பற்றி என்ன நினைக்கவேண்டும் என்பதைச் சார்ந்தது. அந்த அலுவலகத்தில் முழுக்க நிலவும் பொதுவான உடைப்பண்பாடு சார்ந்தது. நேர்த்தியாக உடுத்தியிருக்கிறோம் என்று உணரவைக்கும் சிற்சில மாற்றங்கள் உடைய பாரம்பரிய உடைகள்தான் நம் தேர்வு.

திரைத்துறைகளில் பலரின் ஆடைவடிவமைப்பு முறைகள், மேனாட்டு உடைகளின் வடிவமைப்பு என, பல சூழல்கள் நம் பாரம்பரிய கலாச்சார உடைகளை அப்புறப்படுத்திவிட்டு நம்மைக் கவர்ந்து முன்நிற்கின்றன. பிறரை முகஞ்சுளிக்கச் செய்யாத, பாலியல்

வக்கிரங்களைத் தூண்டாத நாகரிக உடை அணிதலே நம் நாட்டிற்கு ஏற்றதும், நமக்குப் பாதுகாப்பானதும் ஆகும். "ஆள்பாதி, ஆடை பாதி" என்பது எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் முதுசொல். நம் மீது நல்லெண்ணங்களையும், நன்மதிப்பையும் ஏற்படுத்தும் உடைகளை அணிவதே உடையில் நாம் காக்கும் கௌரவம் எனலாம்.

கௌரவம் எனப்படும் நன்மதிப்பு நமது சொல், செயல், நடை, உடை, பாவனைகள் அனைத்திலும் கலந்து நிற்பது. எனவே, நம் வாழ்வின் எல்லாச் செயல்பாடுகளிலும் நாம் கவனமாகச் செயல்பட்டால் கௌரவம் காக்கப்படும். அலட்சிய மனப்போக்கு இன்றி, அதன் இன்றியமையாமையை புரிந்து கொண்டு செயல்படுவோம். தனிமனித, குடும்ப, சமுதாய, கௌரவம் காப்போம்.



ISBN 978 93 87009 37 0

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம்செய்திட வேண்டும் அம்மா !
ங்கயக் கை நலம் பார்த்தல்லவோ பாரில் அறங்கள் வளரும், அம்மா ! – கவிமணி